தடை செய்திருக்கிறது. அந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

மண்ணெண்ணெயை லாரிகளுக்கு உபயோகப்படுத்துவதைக் கண்டு பிடிக்க பெருஞ்சாலைகளில் செல்லும் வண்டிகளின் எரி பொருள்களை எடுத்து பரிசோதித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம் என்றார்கள். அதோடு நான் கண்ணால் பார்க்கிறேன். தாம்பரத்தில் வரிசையாகக் கடைகளை வைத்துக் கொண்டு பெரிய புனல்களை வைத்துக் கொண்டு லாரிகளுக்கு மண்ணெண்ணெய் ஊற்றப்படுகிறது. இவற்றை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யோசனை சொல்ல வேண்டாம். விளக்கம் பெற வேண்டுமென்றால் கேளுங்கள்.

திரு. நா. காசிராமன் : கடைசியில் "ஆகவே" போடவேண்டும். அதைப் போட்டுவிடுகிறேன். (சிரிப்பு.)

ஆகவே, இதுபோல பகிரங்கமாக மண்ணெண்ணெய் உபயோகிக்கப் படுவதைத் தடுக்கவும், சோதனைகள் மூலமும் தடுக்க உடனடியாக என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதைப் போல எந்த எந்தக் காரியங்களுக்கு மண்ணெண்ணெயை உபயோகப்படுத்தலாம் என்று மத்திய அரசு கட்டளையிட்டிருக்கிறதோ அது வற்புறுத்தப்படும். டீசல் எண்ணெய்க்குப் பதிலாக லாரிகளில் மண்ணெண்ணெயை உபயோகப்படுத்துவதை கனம் அங்கத்தினர் நேரில் கண்டதாகச் சொல்வதனால் நம்புகிறேன். அதைத் தடுப்பதற்கும் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும். மேலும் இதுபற்றி உறுப்பினரிடம் தகவல் இருந்தால் அதைத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் நிறைய புகை விட்டுச் செல்கிற வண்டிகளின் எரிபொருளையும் சோதனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். இப்படிப் பரிசோதிப்பதிலும் தவறு இல்லை. ஆகவே இப்படித் தவறாக உபயோகப்படுத்துவதைத் தடுக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

(5) அறிக்கைகள் அளித்தல்

(அ) மோட்டார் வண்டிகள் சட்ட நிர்வாகம், விவசாயம் பற்றிய பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU S. AGNI RAJU : Mr. Speaker, Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken by Government on the recommendations of the Committee contained in the Report on Motor Vehicles Tax Administration (Ninth Report) and the Report on Agriculture (Tenth Report). மு. ப. 10-30

I also submit that the Report on Agriculture is under print and copies will be circulated to Members in due course.

(ஆ) தன் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations of the Committee contained in its earlier Reports.

Sir, the Report is under print and copies would be circulated to Members in due course.